# ஆகஸ்ட் - 21 - திங்கள்

## புனித 10ம் பத்திநாதர்

**மணவறையிலிருந்து புறப்படும் மணமகனைப்போல் அது வருகின்றது: திபா. 19:5**

### முதல் வாசகம் : நீதிபதிகள்2 : 11 – 19

இஸ்ரயேல் மக்கள் ஆண்டவரின் பார்வையில் தீயதெனப்பட்டதைச் செய்தனர். அவர்கள் பாகால்களுக்கு ஊழியம் செய்தனர்.அவர்கள் தங்கள் மூதாதையரை எகிப்து நாட்டிலிருந்து வெளியே கொண்டுவந்த தங்கள் மூதாதையரின் கடவுளாகிய ஆண்டவரைக் கைவிட்டனர். தங்களைச்சுற்றி வாழ்ந்த மக்களினங்களின் தெய்வங்களைப் பின்பற்றி, வழிபட்டு, ஆண்டவருக்குச் சினமூட்டினர்.அவர்கள் ஆண்டவரைக் கைவிட்டுப் பாகாலுக்கும் அஸ்தரோத்துக்கும் ஊழியம் செய்தனர்.இஸ்ரயேலின்மேல் ஆண்டவரின் கோபக்கனல் கனன்றது. எனவே, அவர் கொள்ளையடிப்போரிடம் அவர்களை ஒப்படைக்க, அவர்களும் அவர்களைக் கொள்ளையடித்தனர். அவர்களைச் சூழ்ந்திருக்க எதிரிகளிடம் ஆண்டவர் அவர்களை விற்றார். அதனால் அவர்கள் எதிரிகளின் முன், அவர்களால் எதிர்த்து நிற்க இயலாமற்போயிற்று.ஆண்டவர் அவர்களுக்கு ஆணையிட்டுக் கூறியதுபோல், அவர்கள் போருக்குச் சென்றபொழுதெல்லாம், ஆண்டவரின் கை அவர்களுக்கு எதிராகத் தீமை விளைவித்தது. அவர்கள் பெருந்துயரத்துக்கு உள்ளாயினர்.ஆண்டவர் நீதித் தலைவர்களை எழச்செய்தார். அவர்கள் அவர்களைக் கொள்ளையடித்தவர்களின் கைகளிலிருந்து விடுவித்தனர்.ஆயினும் அவர்கள், தங்கள் நீதித்தலைவர்களுக்குச் செவி கொடுக்கவில்லை ஏனெனில் அவர்கள் வேற்றுத் தெய்வங்களைப் பின்பற்றித் தொழுது வேசித்தனம் செய்தனர் தங்கள் மூதாதையர் ஆண்டவரின் கட்டளைகளுக்குச் செவிகொடுத்து நடந்த நெறியைவிட்டு விரைவில் விலகினர்.ஆண்டவர் அவர்களுக்காக நீதித் தலைவர்களை எழச்செய்த பொழுதெல்லாம் அவர் அந்தத் தலைவர்களுடன் இருந்து, அத்தலைவர்களின் வாழ்நாள் முழுவதும் எதிரிகளின் கையிலிருந்து மக்களை விடுவித்தார். ஏனெனில் துன்புறுத்தப்பட்டு, ஒடுக்கப்பட்ட அவர்களின் அழுகுரலைக் கேட்டு ஆண்டவர் அவர்கள் மீது இரக்கம் கொண்டார்.ஆனால் அவர்கள் ஒவ்வொரு நீதித் தலைவர் இறந்தபொழுதும், வேற்றுத் தெய்வங்களைப் பின்பற்றியும், அவற்றுக்கு ஊழியம் செய்தும், அவற்றை வழிபட்டும், தங்கள் மூதாதையரைவிட இழிவாக நடந்தனர். அவர்களுடைய தீய பழக்கங்களையும் முரட்டுத்தனமான நடத்தையையும் விட்டகலவில்லை.

**பதில்பாடல் :** உம் மக்கள் மீது இரங்கும்போது ஆண்டவரே என்னை நினைவுகூரும்.

### நற்செய்தி : மத்தேயு 19 : 16 – 22

அக்காலத்தில் செல்வரான இளைஞர்ஒருவர் இயேசுவிடம் வந்து, ”போதகரே, நிலை வாழ்வைப் பெற்றுக்கொள்வதற்கு நான் என்ன நன்மை செய்ய வேண்டும்?” என்று கேட்டார்.இயேசு அவரிடம், ”நன்மையைப்பற்றி என்னை ஏன் கேட்கிறீர்? நல்லவர் ஒருவரே. நீர் வாழ்வடைய விரும்பினால் கட்டளைகளைக் கடைப்பிடியும்” என்றார்.அவர், ”எவற்றை?” என்று கேட்டார். இயேசு, ”கொலை செய்யாதே விபசாரம் செய்யாதே. களவு செய்யாதே. பொய்ச்சான்று சொல்லாதே. தாய் தந்தையை மதித்து நட. மேலும், உன்மீது நீ அன்புகூர்வதுபோல் உனக்கு அடுத்திருப்பவர்மீதும் அன்பு கூர்வாயாக” என்று கூறினார்.அந்த இளைஞர் அவரிடம், ”இவை அனைத்தையும் நான் கடைப்பிடித்துவந்துள்ளேன். இன்னும் என்னிடம் குறைபடுவது என்ன?” என்று கேட்டார்.அதற்கு இயேசு, ”நிறைவுள்ளவராக விரும்பினால் நீர் போய், உம் உடைமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடும். அப்பொழுது விண்ணகத்தில் நீர் செல்வராய் இருப்பீர். பின்பு வந்து என்னைப் பின்பற்றும்” என்றார்.அவர் சொன்னதைக் கேட்ட அந்த இளைஞர் வருத்தத்தோடு சென்றுவிட்டார். ஏனெனில் அவருக்கு ஏராளமான சொத்து இருந்தது.

**தியானம்:** இன்றைய தியான வாசகங்கள் நாங்கள் எவ்வாறான வாழ்க்கை வாழ வேண்டும் எமக்குக் கொடுத்த கடமைகள், பொறுப்புக்கள் என்ன என்பதை தெளிவுபடுத்துவதோடு அவற்றைக் கடைப்பிடித்து வாழும் பொழுது நிலைவாழ்வு நிச்சயம் என்பதை தெரிவுபடுத்துகிறது. இன்றைய முதல் வாசகத்தில் திருச்சபையில் பலவகையான குழுக்கள் இருக்கின்றன .அங்கு ஒரே நோக்கமும், ஒரே குறிக்கோளும் இருக்க வேண்டும். அதற்காக எங்களை முழுவதுமாக அர்ப்பணிக்க வேண்டும். ஆனால் அர்ப்பணித்து வாழ்வது என்பது எமது வாழ்க்கையில் கேள்விக்குறியான தொன்றாகும். திருச்சபையானது குழுக்களாக சென்று மற்றவர்களுக்காக செபிக்கும் பொழுதோ, நற்செய்தியைப் போதிக்கும் பொழுதோ எவ்வாறு செயல்படவேண்டும் என்று கற்றுக் கொடுத்திருக்கின்றது. ஆனால் நாங்களோ ஒரே நோக்கத்துடன் செயல்படாமல் வேறுபட்ட வகையில் செயல்படுகின்றோம். குழுக்களிடையே நான் இறைவனுக்கு ஏற்ற வகையில் செயல்படுகின்றேன், மற்றவர்கள் போலித்தனமாக செயல்படுகின்றார்கள் என்று அங்கும் போட்டி மனப்பான்மையுடன் செயல்படுகின்றோம். இவ்வாறாக வாழாமல் ஒருவரை ஒருவர் ஏற்றுக் கொண்டவர்களாக ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும். ஆனால் இறைவனுக்கு ஏற்ற வகையில் செய்கின்றோம் என்று வாயார சொல்லுகின்றோமே தவிர செயலில் செய்வதில்லை. இன்றைய நற்செய்தியிலே நிலையான உண்மையான வாழ்வைப் பெற்றுக்கொள்ள என்ன செய்ய வேண்டும் என்று செல்வாரன இளைஞன் கேட்கும் பொழுது தான் கொடுத்த கட்டளைகளை கடைப்பிடித்து வாழும்படியும், அவ்வாறு வாழ்ந்தால் உன்னிடம் உள்ளவற்றை ஏழைகளுக்கு பகிர்ந்து கொடுக்கும்படியும் அப்பொழுது இறையாட்சிக்கு செல்வது இலகுவானது என்பதை இயேசு தெளிவுபடுத்துகின்றார். “செல்வர் இறையாட்சிக்கு உட்படுவதைவிட ஊசியின் காதில் ஒட்டகம் நுழைவது மேல்” (மத்.19:24) எனவே இறையாட்சிக்கு செல்வதற்கு பலவிதமான தடைகள் ஏற்படத்தான் செய்கின்றன, அவ்வாறு செயற்படுவது எமக்கு கஷ்டமாகத்தான் இருக்கும். இருப்பினும் இறைவன் எங்கள் கூட இருந்து வழிநடத்துவார் என்ற உறுதியான விசுவாசத்துடன் ஒரே நோக்கமும், குறிக்கோளும் கொண்டவர்களாக அவர் பணி புரிவோம்.